வெளிநாட்டவர்களுக்கு கதவை இறுக மூடும் பிரித்தானியா

கலாநிதி. க.சிதம்பரநாதன்
(ஒரு பேப்பருக்காக)

'பிரித்தானியா வரவேற்கின்றது' என்ற வாசகங்களை பிரித்தானியாவின் இறங்கு துறைகளில் பொறிக்கப்பட்டிருப்பதற்குப் பதிலாக எதிர்காலங்களில் 'பிரித்தானியாவிற்கு வர வேண்டாம்' என்றவாறு எழுத வேண்டிய நிலைமைக்கு பிரித்தானியாவின் வெளிநாட்டவர்கள் வருகை தொடர்பான கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

ஆளும் தொழில் கட்சியானது கடந்த 10 வருடங்களுக்கு மேலாக குடிவரவு தொடர்பான சட்டங்களை அதன் வரலாற்றில் என்றுமில்லாதவாறு புதிய சட்டங்களையும் அமுல் படுத்தியதுடன் அதன்- குடிவரவு விதிமுறைகளிலும் பாரிய மாற்றங்களை கொண்டு வந்திருக்கின்றன.

தஞ்சம் கோருபவர்கள், குடிவரவாளர்கள் தொடர்பான சர்ச்சைகள் கடந்த சில வருடங்களாக அரசியல் மேடைக்குரிய, தேர்தலில் மக்களின் வாக்குகளை கவர்ந்து எடுக்கின்ற பிரச்சாரமாக மாறிக் கொண்டு வருகின்றது. பிரதான எதிக்கட்சியான கொன்சேர்வேடிவ், குடிவரவு தொடர்பான விவகாரங்களை எதிர் வரும் தேர்தலில் முக்கிய பிரச்சனையாக முன்வைத்து தொழிற்கட்சியை வீழ்த்தி விடலாமென வரிந்து கட்டி நிற்கின்றது.

வெளிநாட்டவர்களுக்கு எதிரான கொள்கையையுடைய பொது அமைப்புக்கள்,அரசியல் வாதிகள், ஊடகங்கள் போன்றவற்றின் தொடர்ச்சியான விமர்சனங்களில் சிக்கிக் கொண்டிருக்கின்ற ஆளும் கட்சியானது இவ் வகையான எதிர்ப்புக்களை சமாளிப்பதற்காக புதிய புதிய கொள்கைகளையும் நடை முறைகளையும் அடிக்கடி வெளியிட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது.

அடுத்த 20 வருட காலத்தில் சுமார் 5 மில்லியன் வெளிநாட்டு தொழிலாளர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு தேவையென பல ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ள இவ்வேளையில் பிரித்தானியா அரசானது தனது நாட்டுக்குள் தொழில் தேடிவரும் ஐரோப்பியர்கள் அல்லாதவர்களை கட்டுபடுத்துவதற்காக புதிய நடைமுறகளை கையாண்டது.

இப்போது மேலும் புதிய நடைமுறைகளை அறிமுகம் செய்துள்ளதன் மூலம் ஐரோப்பியர்கள் மாத்திரமே பிரித்தானியாவுக்குள் வருவதற்கான வழிகளை ஏற்படுத்தி உள்ளது.

ஏற்கனவே இருந்து வந்த புள்ளி அடிப்படையில் தகுதியானவர்களை தொழில் தேடி பிரித்தானியாவிற்குள் வருபவர்களை அனுமதிக்கும் திட்டமானது அபிவித்தியடைந்த நாடுகளிலிருந்து வரும் அதுவும் முக்கியமாக வெள்ளையினத்தவர்களை மட்டும் வரவேற்கும் குறிக்கோளை கொண்டதாக அமைந்துள்ளது என்றும் ஆசியா, ஆபிக்கா நாட்டவர்கள் வருவதற்கு வழிகோலவில்லை என்ற குற்றச்சாட்டு பொதுவாகவே இருந்து வந்தது. இதற்கு மறுப்பு தெரிவித்து வந்த பிரித்தானியா அரசானது புள்ளியடிப்படையில் தெரிவு செய்யப்படாத சாதாரண தொழிற் பயிற்சி உள்ளவர்களையும் பொதுவலய நாடுகளுக்கான கோட்டா அடிப்படையிலான விடுமுறைகால வேலைவாய்ப்பு திட்டங்களை அறிமுகம் செய்து தொழில் தேடுபவர்களை அனுமதித்து வந்தது.

ஐரோப்பிய நாட்டவர்கள் தவிர்ந்த ஏனையோருக்கு ஆங்கில அறிவு தரமுள்ளதாக இருக்க வேண்டுமென்ற புதிய கொள்கை மறை முகமாக ஆங்கில மொழியை அதிகம் வழக்கி லில்லாத நாடுகளிலிருந்து வருபவர்களை கட்டுப்படுத்தும் செயலென பலராலும் சுட்டிக் காட்டப் படுகின்றது.

இந்த வருடம் முதல் அறிமுகப்படுத்தப் படவிருக்கின்ற விடுமுறையை கழிப்பதற்கான விசா அனுமதியை தவிர்ந்த மற்றைய சகல விசாக்களும் புள்ளியடிப்படையில் வழங்கும் புதிய நடைமுறையைக் கொண்டு வந்திருப் பதினால் ஆசிய -ஆபிரிக்க நாட்டவர்களுக்கான விசா அனுமதி வழங்குவது மிகவும் அரிதாகவே இருக்கப்போகின்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான கட்டுப் பாடற்ற நடமாடுதல் திட்டம் நடைமுறைக்கு வந்த பின்பு, கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து பிரித்தானியாவிற்குள் குவியும் சாதாரண குறைந்த தொழில் அனுபவங்களையும் பயிற்சிகளையும் உடைய வேலை தேடுபவர்களின் எண்ணிக்கைகையை கட்டுப் படுத்துவதற்கான எந்த விதமான சட்ட மூலங்களையோ அல்லது நடைமுறை களையோ கொண்டுவரமுடியாத 'பொறிக்குள்' சிக்கியிருக்கின்ற பிரித்தானியா, மூன்றாம் தர நாடுகளென வருணிக்கப்படுகின்ற ஆசிய ஆபிக்கா நாட்டவர்களின் வருகையை கட்டுப் படுத்துவது மாத்திரமின்றி முற்றாக தடை செய்வதற்கு எதிர்காலத்தில் முயன்றாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை.

புதிய சட்டமூலங்களையும் நடைமுறை களையும் அடிக்கடி அறிமுகப்படுத்தும் பிரித் தானியா அரசானது கடந்த பெப்ரவரி மாதம் 6ம் திகதி பிரித்தானியா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் இலங்கை தமிழர் களையும் வெகுவாக பாதிக்கப்படவிருக்கும் ஒரு புதிய நடைமுறை பற்றி இங்கு உதாரணமாக குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும்.

பிரித்தானியாவில தஞ்சம் கோரிய நிலையில் குடிவரவு விதிகளை மீறியிருப் பவர்கள் அதாவது-தங்கள் இருக்கையை நிரூபிப்பிதற்காக கையெழுத்து இடுவதை தவிர்த்துக் கொண்டவர்கள் சட்டவிரோதமாக தொழில் செய்வதாக கண்டு பிடிக்கப்பட்ட வர்கள் போலியான குடிவரவு பத்திரங்களை அல்லது வேறு நடைமுறைகளில் ஈடுபடு பவர்கள் நாடு கடத்தப்பட்டாலோ அவர்கள் மீன்டும் 10 வருடகாலத்திற்கு பிரித்தானி யாவிற்குள் வருவது தடைசெய்யப்படும்.

இதேவேளை பிரித்தானியாவின் குடிவரவு விதிகளை மீறியவர்கள் தாங்களாகவே விரும்பி திரும்பிச் சென்றால் 5வருட காலத்திற்கு வருவது தடைசெய்யப்படும்.

இந்த புதிய குடிவரவு நடைமுறைகளின்படி ஒருவர் விசா அனுமதி முடிவடைந்து 28 தினத்திற்கு மேலாக பிரித்தானியாவில் சட்டவிரோதமாக வாழ்ந்திருந்தால் அவர்கள் திரும்பவும் ஒரு வருட காலத்திற்கு பிரித்தானி யாவிற்குள் வருவதற்கு அனுமதிக்கபட மாட்டர்கள்.

தற்போதுள்ள குடிவரவு விதிகளின் பிரகாரம் குடிவரவு விதிகளை ஏதோ காரணங்களுக்காக மீறியவர்கள் நாடு கடத்தப்பட்டாலோ அல்லது தாங்களாகவே விரும்பிச் சென்றாலும் அவர்கள் திரும்பவும் ஏதாவது விசாவில் வருவதற்கு எவ்வித கட்டுபாடுகளோ அல்லது தடைகளோ இல்லை.

ஒருவர் விசா அனுமதி முடிவடைந்து 28 தினத்திற்கு மேலாக பிரித்தானியாவில் சட்ட விரோதமாக வாழ்ந்திருந்தால் அவர்கள் திரும்பவும் ஒரு வருட காலத்திற்கு பிரித்தானியாவிற்குள் வருவதற்கு அனுமதிக்கப்பட மாட்டர்கள்.

இந்த அடிப்படையில்தான் பல தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டவர்கள் அல்லதுமற்றையசட்ட விரோத குடிவரவாளர்கள் தாங்களாகவே திரும்பிச் சென்றோ அல்லது நாடு கடத்தப் பட்டாலோ தங்கள் நாட்டிலுள்ள பிரித்தானிய விசா வழங்கும் காரியாலயங்களிலிருந்து விசா அனுமதியை பெற்று வருகின்றார்கள்.

இந்த நடை முறையினால் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்ட பல இலங்கைத் தமிழர்கள் முக்கியமாக இங்கு நிரந்தர இருப்பிட விசாவை யுடைய ஒருவரை திருமணம் செய்தவர்கள் தங்கள் குடும்பத்துடன் இணைவதற்கான விசாவை அல்லது வேலை அனுமதியை பெற்று அதற்கான விசாவை பெறுவது போன்ற பல்வேறு நடைமுறைகள் யாவும் ஏப்ரல் மாதத்துடன் இல்லாமல் போய்விடும்.

ஐரோப்பிய நாடுகளில் மிகவும் 'மென்மையான' குடிவரவு விதிகளை பிரித்தானிய நாடு கொண்டுள்ளது என்ற ஒரு பொதுவான அபிப் பிராயம் பல வருடங்களுக்கு முன்பாக இருந்தது. அதில் உண்மையும் இருந்தது.

தஞ்சம் கோருவோர் தொடர்பான சட்ட மூலங்கள், குடும்பங்கள் இணைதல், கல்வி கற்றவர்கள், தொழில் செய்கின்றவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேலாக தொடர்ந்து வாழும் பட்சத்தில் நிரந்தர வதிவிடத்தை பெறுவது மாத்திரமின்றி அவர்களுடைய குடும்பத்தினரும் இணைவதற்கான வாய்ப்புக் களையும் பிரித்தானியா நாடு வழங்கி வந்துள்ளது. அது மாத்திரமல்லாமல் பிரித் தானியா நீதி வழங்கும் பாரம்பரியத்திலும் குடிவரவாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப் பட்டுத்தான் வந்துள்ளன. இதற்கும் மேலாக மனித உரிமைகள் சட்டத்தை பிரித்தானி யாவிற்கென்று பிரகடனப்படுத்தியதிலிருந்து அந்த உரிமைக்கு மேலும் வலு சேர்க்கப்பட்டது.

பிரித்தானியாவின் இந்த மென்மையான போக்குடைய நடைமுறைகளினால் குடிவரவு விதிகளையும், தஞ்சம் வழங்குவதற்கான சர் வதேச சட்டங்களுக்கு உட்பட்ட கடப்பாடு களையும் பல ஆயிரக்கணக்கானோர் துஸ்பிர யோகம் செய்து வந்துள்ளார்கள் என்ற கருத்தும், இதன் பலாபலன்தான் இப்போது பிரித்தானியாவிற்குள் எண்ணிக்கை தெரியாத சட்டவிரோத குடிவரவாளர்களும், திருப்பி அனுப்பமுடியாத நிலையில் நிராகரிக்கப்பட்ட தஞ்சம் கோரியவர்களும் இருக்கின்றார்கள் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதேவேளை பல்வேறுபுதியசட்டங்களையும் நடைமுறைகளையும் அறிமுகப்படுத்தும் போது அவை பெரும்பாலனவை பிரித்தானியா விற்குள் புதிதாக வரும் குடிவரவாளர்களை கட்டுபடுத்துவதற்கோ அல்லது தடுப்பதற்கோ உதவுமே தவிர ஏற்கனவே இங்கு வாழ்கின்ற சட்டவிரோத வெளிநாட்டவர்களின் பிரச்சினை னையைத் தீர்ப்பதற்கு உதவாது என்ற கருத்தை பல குடிவரவு இலாகாவின் உயர் அதிகாரிகள் அமைச்சர்களுக்கு முன்வைக்கின்றார்கள்.

இங்கு ஏற்கனவே இருக்கின்றவர்களின் பிரச்சினைகளை சுமூகமாக தீர்க்கப்படா விட்டால் புதிய சட்டமூலங்கள் நடைமுறைகள் வெகுவாக தாக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லையெனவும் கருதுகின்றாகள்.

சட்டவிரோத குடிவரவாளர்களின் விவகாரம் ஒரு அரசியல் பிரச்சினையாக பூதாகாரம் எடுத்திருக்கின்ற இந்த வேளையில் இதனை எப்படி சமாளிப்பதென்ற தர்மசங்கடத்தில் ஆளும் கட்சியினர் திணறிக் கொண்டிருக்கின்றர்கள்.

வெளிநாட்டவர்களுக்கு எதிராக தினசரி எதையாவது எழுதிக் கொண்டிருக்கும் பிரித் தானியா மக்களின் நம்பிக்கையை பெற்றிருக் கின்ற சில சின்னப் பத்திரிகைகள் ஆளும் தொழிற்கட்சியின் குடிவரவு கொள்கைகளை அவ்வப்போது படம் பிடித்து விமர்சித்த வண்ணமே இருக்கின்றன.

பிரித்தானியாவில் வரி செலுத்தும் மக்களின் பணத்தில் சட்டவிரோதமாக வாழும் வெளி நாட்டவர்கள் சொகுசு வாழ்க்கை நடாத்து வதாகவும் பிரித்தானிய பிரஜைக்கு கிடைக்காத சலுகைகள் வெளிநாட்டவருக்கு கிடைக் கின்றது போன்ற பல்வேறு பிரச்சரங்களை இந்த ஊடகங்கள் செய்து கொண்டு வருகின்றன.

சில சந்தர்ப்பங்களில் உண்மைக்கு புறம் பான ஆதாரமற்ற அப்பட்டமான பொய் களைக் கூட வெளியிட்டிக்கின்றன.

இப்படியான ஒரு கால கட்டத்தில் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காணுவதானால் பிரித்தானியா அரசுக்கு இரண்டு வழிகளே உண்டு.

(தொடர்ச்சி 18ம் பக்கத்தில்)

TRICO - *The name you can trust*

Door to Door Service
Western province by air & Sea
Call for details Regular Shipping service
At competitive Prices to:
Australia, Canada, Chennai, Bangalore, Cochin and Calcutta

Two more collection points:
Glasgow and South West London
Regular weekly savings means the fastest delivery to Sri Lanka.

உங்கள் வசதிக்காக Tooting இல்
Collecting point!
A - Lanka
171 Tooting High Street,
London SW17

Contact **Vimal**
Tel: **020 8672 5551**
Fax: **020 8889 5445**
Email: tricont@btclick.com

HOT NEWS
Extra Receiving depot in South - London SW17
You can collect packing cases and deliver packed goods to SW17.
Save your money on transport

Trico International Shipping Ltd.
Unit 4,
Bittern Place,
Coburg Road,
Wood Green, London N22 6TP